வரையறுத்த கொழும்பு கொமேசியல் பசளைக் கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 10,271,929,581 தொகையான பெற வேண்டிய திறைசேரி மானியம் மற்றும் ரூபா 23,630,938 கூட்டு மொத்தமான கடன்கொடுத்தோர்களுக்கான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததனால் அம்மீதிகளின் சரியான தன்மையும் உள்ளமையும் சம்பந்தமாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பயன்தரும் ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்ய முடியாததன் காரணமாக ரூபா 58,422,683 கூட்டு மொத்த கிரயமான இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தன. எவ்வாறாயினும் அந்த மதிப்பீட்டுத்தவறை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மற்றும் பெற வேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,574,321 கூட்டு மொத்தமான கடன்பட்டோர் மீதியும் இலங்கை பசளைக் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா 4,993,147 மீதியும் அந் நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 6(2) ஆம் பந்தியின் பிரகாரம் காணிகளை விற்பனை செய்யும் போது பெற்றுக்கொள்ளப்படும் இலாபம் வருடாந்த வரிக் கணிப்பீட்டின் போது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதுடன் அக்காணிகளை மீள்மதிப்புச் செய்து அதிலிருந்து உருவாகும் மீள்மதிப்பு மிகையின் தாக்கம் வருடாந்தம் பிற்போட்ட வரி கணிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனிக்குச் சொந்தமான காணி சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக் கூற்றுக்ககள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்களானது கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைத் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் கட்டளையிடப்பட்டவாறு நான் பின்வரும் விடயங்களைத் தெரியப்படுத்துகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை, கணக்காய்விற்கான நோக்கெல்லையும் மட்டுப்படுத்தல்களும் என்பன கீழே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதுவும் என்னுடைய பரிசோதனைகளிலிருந்து தோன்றியதற்கு ஏற்ப கம்பனியால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்பதுவும்.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கிய வகையில் உள்ளன என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 பெற வேண்டிய கணக்குகள்

ஒரு ஆண்டிற்கு மேல் பழைமையான ரூபா 17,021,172 கூட்டுமொத்தமான கடன்கொடுத்தோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது கணக்குகளில் தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பசளைகளை கொள்வனவு செய்வதற்கான கடனிற்கு வட்டி செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய மீதியாக ரூபா 161,076,726 தொகை ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் அதனை அறவீடு செய்வதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்தவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் தாபன விதிக்கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | 2018 யூன் மாதத்தின் போது கம்பனியால் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 1,349,522 பெறுமதியான 19.4 மெட்ரிக் தொன் பசளைகளின் பற்றாக்குறை மற்றும் கைகளில் வைத்திருந்த ரூபா 2,892,000 விற்பனைப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்யாமை சம்பந்தமாக பொறுப்பான தரப்பினர்களை நிர்ணயித்துக் கொள்வதற்காக விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருக்காததுடன் பொலிசில் முறைப்பாடு செய்தல் தொடக்க மற்றும் முழுமையான அறிக்கையைச் சமர்ப்பித்தல் முதலிய செயற்பாடுகளும் இடம் பெற்றிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | ஏதாவது ஒரு செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் திர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 19 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 373,500 மொத்த தொகையான முற்பணங்கள் 11 நாட்களிலிருந்து 58 நாட்கள் வரையான கால வீச்சில் தாமதித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளுக்காக கம்பனியால் பதிவேட்டுப் பொருட்கள் சம்பந்தமாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் |

| | | |
|---|---|---|
| | | அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 880 | களஞ்சியத்திற்குப் பொறுப்பானவரால் பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் 07 களஞ்சியக் காப்பாளர்களால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 மே 24 ஆந் திகதிய பீஎப்/பீஈ/21 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 290,312,645 வரிக்கு முன்னைய தேறிய இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னைய தேறிய இலாபம் ரூபா 70,174,292 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 220,138,353 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நிதி வருமானம் ரூபா 105,494,871 ஆல் அதிகரித்தல், பசளைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பான கடன் கணக்கு மீதிக்கும் திறைசேரியிடமிருந்து அக்கடனைத் தீர்த்து வைப்பதற்காகப் பெற வேண்டிய மீதிக்குமிடையேயான வித்தியாசமாகிய ரூபா 395,599,750 தொகையை வருமானமாக இனங்காண்தல் என்பன நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### 4.1.1 திட்டமிடல்

(அ) அரசாங்க தொழில் முயற்சிகளின் வணிக நடவடிக்கைகள் குறுங்கால மற்றும் நீண்டகால நோக்கங்களுடன் முகாமைத்துவம் செய்ய வேண்டியிருந்ததனால் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகள் காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க உத்தேச இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் வணிகத்தை செயற்படுத்துதல் பணிப்பாளர்கள் சபையின் முழுமையான பொறுப்பாக இருந்த போதிலும் கம்பனியால் ஒரு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி ஒரு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் கடன் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் தமது முகவர்களுக்கு கடன் அடிப்படையில் பசளைகளை விற்பனை செய்யும் போது ரூபா ஒரு மில்லியனிலிருந்து ரூபா இரண்டு மில்லியன் வரையான கடன் எல்லையின் கீழ் பசளைகள் விற்பனை செய்யப்பட வேண்டிய போதிலும் 09 முகவர்களக்கு

அங்கீகரித்த எல்லையை மிகைத்து ரூபா 10.89 மில்லியன் பசளைகள் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த முகவர்களிடமிருந்து கடனை அறவீடு செய்வதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது.

(ஆ) இலக்கம் 01- பீ இருப்பு களஞ்சியத்தின் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் பிரகாரம் யூரியா பசளைகள் இருப்பேட்டின் பிரகாரம் மீதி 3,023.85 மெட்ரிக் தொன் ஆக இருந்ததுடன் பௌதீக மீதி மெட்ரிக் தொன் 3,234.60 ஆக இருந்தது. இதன்படி இருப்பேட்டு மீதியினை மிகைத்து 210.75 மெட்ரிக் தொன் பௌதீக மீதி காணப்பட்டதுடன் இது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரமின்றி 07 நிலையான வைப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 1,395 மில்லியன் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

(அ) கைக்காசு விற்பனைக்காக 2018 சனவரி 24 ஆந் திகதி தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 113,677 பெறுமதியான காசோலைகள் உரிய திகதிகளில் வங்கிக்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக காலாவதியாகியதன் அடிப்படையில் 2018 மே 22 ஆந் திகதி வங்கியினால் மதிப்பிழக்கச் செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றிற்குரிய பணத்தை 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் உரிய நிறுவனங்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு தனியார் கம்பனிக்கு 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 75,814 முற்பணத்தை 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதிவரையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டண அதிகாரச் சட்டத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டும் முடிவில் பொருளாதார சேவைக் கட்டணம் அடுத்து வரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாகச் செலுத்த வேண்டிய ரூபா 17,244,452 மொத்த தொகையான பொருளாதார சேவைக் கட்டணத்தை 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விற்பனையை மேம்படுத்தும் குறிக்கோளுடன் ரூபா 3,476,948 செலவு செய்து ஆறு மாவட்டங்களில் பொருத்தப்பட்டுள்ள வர்த்தகத்தை பிரசித்தப்படுத்தும் 06 விளம்பரப் பலகைகளுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபைகளின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் அலுவலக சுற்றாடலில் 4000 சதுர அடி அளவிலான ஒரு அலுவலக கட்டிடம் கடந்த 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக மூடப்பட்டிருந்ததுடன் இக் கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு அல்லது வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 மார்ச் 06 ஆந் திகதி ரூபா 850,000 செலவு செய்து பசளைகள் கலக்கும் ஒரு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை இக்கலவை இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4.5 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) கம்பனியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர், கணக்காளர், உதவி முகாமையாளர் (விற்பனைகள்) நிர்வாக உத்தியோகத்தர் ஆகிய பதவிகளை உள்ளடக்கி 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் உதவி சட்ட முகாமையாளர் கம்பனியின் செயலாளராகச் செயற்படும் உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொண்டிருந்தும் அவரின் சேவையைப் பெற்றுக் கொள்ளாது வெளிக் கம்பனி ஒன்றின் செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தாலும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் எனினும் மீளாய்வாண்டு தொடர்பாக கம்பனியால் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ள வேண்டிய மையப் புள்ளிகள் அதே போல் இலக்குகளின் அடிப்படையில் அடைந்து கொள்வதனை அறவீடு செய்வதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக கம்பனியால் இனங்காணப்பட்ட நடவடிக்கைகள் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017/2018 ஆம் நிதி ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 பெறுகை

#### 6.2.1 பெறுகைகள்

கம்பனி மீளாய்வாண்டிற்காக ஒரு பெறுகை திட்டத்தினை தயாரித்திருக்காததுடன் வேலை, பொருட்கள் மற்றும் சேவைப் பெறுகைகளை மேற்கொள்வதற்காக ரூபா 1929.05 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 15 செலவு விடயங்கள் சம்பந்தமாக பாதீடு செய்யப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 40 சதவீதத்திற்கு மேற்பட்ட முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.4 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

கம்பனியின் 2015/2016 மற்றும் 2016/2017 ஆகிய ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2016/2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 4.2 ஆம் பந்தியின் கீழ் காட்டப்பட்டிருந்த கம்பனிக்கு ஒரு நிறுவனத்திடமிருந்து குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காணியிலிருந்து முறையான பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையானது மீளாய்வாண்டின் இறுதி வரை சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுக் குறைபாடுகள் கம்பனியின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி கணக்கேடுகள் பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | பிரதான பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களுக்கு தேவையான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படாமை. |